# 55

## கணினியில் தமிழ்

முனைவர் இரா. பக்கிரிசாமி

எ.எப். பிளாக், 11வது பிரதான சாலை, அண்ணாநகர், சென்னை40

ஒரு மொழி ஒரு இனத்தை அடையாளம் காட்டுகிறது. தமிழ் மொழி பேசுபவர்கள் தமிழர்கள். ஆங்கிலம் பேசுபவர்கள் ஆங்கிலேயர்கள்.

ஒரு மொழி வளர வழிவழியாக வளம் பெறவேண்டுமாயின் அம்மொழி பேசும் மக்களை சேர்ந்தது. தம் மொழியை அலட்சியப்படுத்திவிட்டு மற்ற மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பார்களாயின் அம்மொழி அழிந்துவிடும். அம்மொழிபேசும் மக்களின் இனப் பெயரும் தெரியாமல் போய்விடும். இது இயற்கை. அந்த இனமும் இல்லாமல் போய்விடலாம். உலகத்தில் இந்த இயற்கை நிகழ்ச்சி நடந்துகொண் டிருப்பதை பார்த்துக்கொண்டிருக்கிறோம்

சமீபத்தில் பிரஞ்சு நாட்டில் மொழிகளைப் பற்றிய ஒரு ஆய்வு நடந்தது. தற்போது வழக்கில் இருக்கும் 1000 மொழிகளில் இன்னும் 100 ஆண்டுகளுக்கு பிறகு எத்தனை மொழிகள புழக்கத்தில் செழுமை யாக இருக்குமென ஆராய்ந்தார்கள்.

அந்த ஆராய்ச்சியின் முடிவு – 100 ஆண்டுகளுக்குப் பிறகு உலகில் 100 மொழிகள்தான் வழக்கில் இருக்கும்.

ஒரு மொழி

பல காலம் பேசப்படவேண்டும்

பல காலம் எழுதப்பட வேண்டும்

மக்களின் பொருளாதாரத்தை மேன்மைப்படுத்தவேண்டும்

காலத்திற்கு ஏற்ற அறிவியல் நுணுக்கங்களை எடுத்துச் சொல்லவல்லதாக இருக்கவேண்டும்

மேற்சொன்ன குணங்களைப் பெற்றிருக்கும் மொழிதான் காலத்தால் அழிக்க முடியாததாக இருக்கும்.

இவ்வாறெல்லாம் கணித்துப் பார்க்கும்பொது இந்தியாவில் இந்தி மொழி ஒன்றுதான் இந்த கணிப்புக் குள் அடங்குமாம். தமிழ் மொழி இருக்காதாம். இது என்ன வேடிக்கை. ஆம், இதுதான் உண்மையும் கூட. இந்த நிலை வரலாமோ? அன்றே பாரதி சொன்னான் 'தமிழினி சாகும் – அந்த மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும்`. அவன் நமக்குக் கட்டளை இட்டதைப் போல் சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.

அந்த சேவையைத்தான் இப்போது தொடங்கி இருக்கிறோம். அதன் தொடர்புதான் கணினியில் தமிழைப் புகுத்துதல் நாம் செய்யவேண்டிய முதல் கடமையாகும்.

இந்த பணியினை நம் கணினி படித்த இளைஞர்கள் முழுமூச்சுடன் செய்து வருகிறார்கள். அவர் களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தரவேண்டியது நம் கடமையாகும்.

நம்மைப் போன்ற சமுதாயப் பணி அமைப்புகள் தமிழ்க் கணினியை கிராமங்கள்தோறும் பரவ செய்ய வேண்டும். அதன் மூலம் தமிழ் மாத்திரமே படித்த மக்களுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுத் தரவேண்டும்,

தமிழ்த் தட்டச்சு கற்றுத் தரும் நிலையங்கள் போலவே கணினி தமிழ் தட்டச்சுக் கூடங்கள் கிராமங் கள்தோறும் திறக்கப்படவேண்டும். தமிழ் கணினி நமக்கு ஒரு வரப்பிரசாதம். அதனை செவ்வனே பயன்படுத்திக்கொண்டால் நம் இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலம் காத்துக் கொண்டிருக்கிறது. தமிழக அரசு பல அலுவலகங்களில் பத்திரப் பதிவு அலுவலகம், வட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் இந்த நல்ல தருணத்தை நழுவ விடுதல் கூடாது. அதே நேரத்தில் நம் இளைஞர் களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.

இவ்வாறாகப் பேச்சில், எழுத்தில், அறிவியல் துறையில் தமிழைப் பயன்படுத்துவோமாயின் தமிழ் என்றென்றும் புழக்கத்தில், பழக்கத்தில் நின்று நிலைத்துவிடும். 100 ஆண்டுகள் என்ன, இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆனாலும் நம் தமிழ் வாழும், வளம் பெறும். இது திண்ணம்.

வெறுங்கை என்பது மூடத்தனம்.

விரல்கள் அத்தனையும் மூலதனம் – என்றான் தாரா பாரதி.

ஆம் விரல்கள் அத்தனையும்

கணினிக்கு மூலதனம்

என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவோம். நம் தமிழை வளமுற வாழ வைப்போம்.